மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 361, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

361—

குளிர்சாதன நகரப் பேருந்து

*****34058—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் குளிர்சாதன நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரையில் குறைவான உயரம்கொண்ட படிக்கட்டுகள், காற்றோட்டம் உள்ள வெண்டிலேட்டர்கள், தனித்தனி இருக்கைகள், மின் ஒளிரும் விளக்குகள் கொண்ட வழித்தடப் பலகைகள் போன்ற பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மதுரையில் குளிர்சாதன நகரப் பேருந்துகள் இயக்க செயற்குறிப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், ஆறரை கோடி தமிழக மக்களின் அட்சய பாத்திரமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத்தில் இந்தியாவை வழிநடத்தி நாளைய பாரதப் பிரதமராக வரக்கூடிய அன்புத் தாய், தன் வாழ்க்கையில் வாழ்நாளில் கண்டிராத சாதனையாக காவேரி நடுவர் மன்றத்*

2013 ஏப்ரல் 30]

இறுதித்தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த ஏழை விவசாய மக்களின் ஏற்றமிகு தலைவியாம் எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொலைகாரரின் கைப்பிடியிலிருந்த மதுரையை மீட்டார் எங்கள் மாதரசி அம்மா அவர்கள் அன்று. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டார் எங்களது பொன்னியின் செல்வி இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவையும் மீட்பார் நாளை. (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைகளின் மறு உருவாய் திகழும் எங்கள் இதய தெய்வம், தங்கத் தாரகை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 10-50

மதுரை மாநகரில் எனது தொகுதியிலுள்ள புதூரிலிருந்து திருமங்கலம் வரை குளு குளு வசதி கொண்ட குளிர்சாதன நகரப் பேருந்து இயக்கவேண்டுமாய்க் கேட்பதோடு, புதூர் பகுதியில் அரசு அலுவலகங்கள் அதிகமாக இருப்பதாலும், வியாபார ரீதியான பகுதியாக இருக்கும்பட்சத்தினாலும், திருமங்கலம், திருநகர், திருப்பரங்குன்றம், பழங்காநத்தம் ஆகிய பகுதிகளிலிருந்து அரசு அலுவலர்களும், வியாபார மக்களும் அதிகமாக வருவதாலும், அந்த வழித் தடத்தில் குளு குளு வசதிகொண்ட குளிர்சாதன நகரப் பேருந்துகளை கோடைக் காலத்தைக் கருத்தில்கொண்டு இயக்கினால், தற்போது சாதாரணப் பேருந்துகளைப் பயன்படுத்தும் மக்கள் மேலும் பயன்பெறுவார்கள் என்பதையும், வளர்ந்துவரும் மதுரையில் மேலும் ஒரு மைல் கல்லாக இந்தக் குளிர்சாதனப் பேருந்துகள் விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வழித்தடத்தில் குளிர்சாதன நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் 100 வால்வோ குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதில்

சராசரியாக நாள் ஒன்றுக்கு பயணிகளின் இருக்கைகள் எண்ணிக்கைக்கேற்ப பார்க்கும்போது 28 சதவிகிதத்திற்கு மட்டுமே குளிர்சாதனப் பேருந்துகளில் பயணிகள் பயணம் செய்கின்றனர். காரணம் 3 மாதங்கள் அல்லது 4 மாதங்கள் மட்டுமே பயணிகள் பயன்படுத்தக்கூடிய, அதிலும், கோடைக் காலத்தில் மட்டுமே அதிகம் பயன்படுத்தக்கூடிய வகையில் இருக்கைகளின் எண்ணிக்கைகள் அமைந்திருக்கின்றன. மதுரை மக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 22 புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு ஆணையிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. குளிர்சாதன வால்வோ பேருந்துகளைப் பொறுத்தவரையில் மதுரை மாநகரில் இயக்குவதற்குண்டான தற்போதைய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்த குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்படும்போது, அது மூன்று மாதங்கள் மட்டுமே மக்களுடைய பயன்பாட்டில் அதிகமாக இருப்பதாலும், மற்ற மாதங்களில் அதற்குண்டான பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், வருங்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 362, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.